| (கழி): இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் உள்ள கடன்கள் மற்றும் வருமதிகள் | - | - |
| **தேறிய கடன்கள் மற்றும் வருமதிகள்** | **67,594,981** | **52,667,312** |

| ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள் - பொருள் ரீதியாக | நடப்பு காலப்பகுதி 31/12/2016இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | முன்னைய காலப்பகுதி 31/12/2015இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| **பொருள் ரீதியாக - உள்நாட்டு நாணயம்** | | |
| மேலதிக பற்றுகள் | 13,169,349 | 6,491,389 |
| தவணைக் கடன்கள் | 14,780,922 | 11,954,543 |
| குத்தகை வாடகை வருமதிகள் | - | - |
| கடன் அட்டைகள் | 5,582,137 | 5,055,606 |
| அடகு | - | - |
| ஏனைய கடன்கள் | 13,397,579 | 11,924,282 |
| **உப தொகை** | **46,929,987** | **35,425,820** |
| **பொருள் ரீதியாக - வெளிநாட்டு நாணயம்** | | |
| மேலதிக பற்றுகள் | 1,064,761 | 1,831,737 |
| தவணைக் கடன்கள் | 8,636,740 | 7,417,594 |
| ஏனைய கடன்கள் | 11,797,826 | 8,318,679 |
| **உப தொகை** | **21,499,327** | **17,568,010** |
| **தொகை** | **68,429,314** | **52,993,830** |

| ஆண்டிற்கான ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்களின் மற்றும் வருமதிகளின் தனிப்பட்ட மற்றும் திரண்ட பெறுமதி குறைப்புக்களின் அசைவுகள் | நடப்பு காலப் பகுதி 31/12/2016இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | முன்னைய காலப்பகுதி 31/12/2015இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| **தனிப்பட்ட பெறுமதி குறைப்பு** | | |
| ஆரம்ப மீதி | 17,884 | 21,430 |
| இலாபக்கூற்றில் விதிக்கப்பட்டது/மீள் எழுதப்பட்டது | 612,053 | 128,940 |
| காலப்பகுதியில் பதிவளிக்கப்பட்டவை | (104,249 ) | (132,006) |
| ஏனைய அசைவுகள் | - | (480) |
| **இறுதி மீதி** | **525,688** | **17,884** |
| திரட்டிய பெறுமதி குறைப்பு | | |
| ஆரம்ப மீதி | 308,634 | 345,152 |
| இலாபக்கூற்றில் விதிக்கப்பட்டது/மீள் எழுதப்பட்டது | (796 ) | (45,796) |
| ஏனைய அசைவுகள் | 807 | 9,278 |
| **இறுதி மீதி** | **308,645** | **308,634** |
| **மொத்த பெறுமதி குறைப்பு** | **834,333** | **326,518** |

| ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை - பொருள் ரீதியாக | நடப்பு காலப் பகுதி 31/12/2016இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | முன்னைய காலப்பகுதி 31/12/2015இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| **பொருள் ரீதியாக - உள்நாட்டு நாணயம்** | | |
| கேள்வி வைப்புக்கள் (நடப்பு கணக்குகள்) | 12,646,723 | 12,646,515 |
| சேமிப்பு வைப்புக்கள் | 20,088,395 | 14,017,441 |
| நிலையான வைப்புக்கள் | 19,846,507 | 16,157,558 |
| ஏனைய வைப்புக்கள் | 2,526,747 | 2,726,189 |
| **உப தொகை** | **55,108,372** | **45,547,703** |
| **பொருள் ரீதியாக - வெளிநாட்டு நாணயம்** | | |
| கேள்வி வைப்புக்கள்(நடப்பு கணக்குகள்) | 18,090,491 | 9,758,885 |
| சேமிப்பு வைப்புக்கள் | 29,608,761 | 12,764,070 |
| நிலையான வைப்புக்கள் | 2,795,974 | 2,497,217 |
| ஏனைய வைப்புக்கள் | 5,377,579 | 8,400,576 |
| **உப தொகை** | **55,872,805** | **33,420,748** |
| **தொகை** | **110,981,177** | **78,968,451** |

## ஸ்டான்டர்ட் சார்டர்ட் வங்கி, இலங்கை

ரூ.ஆயிரம்

### நிதியியல் சாதனங்களின் அளவீட்டு அடிப்படையிலான பகுப்பு

| 31/12/2016இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | வ.வை | இ.அ.ந. ஊ.நி.ம. நி | மு.வ.வை | கடன் தீர்ப்பனவுச் செலவு | வி.கி.கூ. | காப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | - | - | - | 6,886,081 | - | - | 6,886,081 |
| மத்திய வங்கிகளுடனான மீதிகள் | - | - | - | 3,651,548 | - | - | 3,651,548 |
| வங்கிகளிலுள்ள இருப்புக்கள் | - | - | - | 24,256,873 | - | - | 24,256,873 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 749,113 | - | - | - | - | - | 749,113 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மிதிப்பீட்டில் உள்ள ஏனைய நிதியியல் சொத்துக்கள் | - | - | - | - | - | - | - |
| வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள் | - | - | - | 8,768,830 | - | - | 8,768,830 |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள் | - | - | - | 67,594,980 | - | - | 67,594,980 |
| நிதியியல் முதலீடுகள் | 4,775,801 | - | - | - | 24,159,083 | - | 28,934,884 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **5,524,914** | **-** | **-** | **111,158,312** | **24,159,083** | **-** | **140,842,309** |

| 31/12/2016 இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | வ.வை | இ.அ.ந. ஊ.நி.ம. நி | கடன் தீர்ப்பனவுச் செலவு | காப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **பொறுப்புக்கள்** | | | | | |
| வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை | - | - | 1,975,053 | - | 1,975,053 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 733,609 | - | - | - | 733,609 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மிதிப்பீட்டில் உள்ள ஏனைய நிதியியல் பொறுப்புக்கள் | - | - | - | - | - |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை | - | - | 110,981,177 | - | 110,981,177 |
| ஏனைய கடன்பாடுகள் | - | - | 112,330 | - | 112,330 |
| வழங்கப்பட்ட படுகடன் பிணைகள் | - | - | - | - | - |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | **733,609** | **-** | **113,068,560** | **-** | **113,802,169** |

| 31/12/2015 இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | வ.வை | இ.அ.ந. ஊ.நி.ம. நி | மு.வ.வை | கடன் தீர்ப்பனவுச் செலவு | வி.கி.கூ. | காப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | - | - | - | 4,438,210 | - | - | 4,438,210 |
| மத்திய வங்கிகளுடனான மீதிகள் | - | - | - | 2,997,535 | - | - | 2,997,535 |
| வங்கிகளிலுள்ள இருப்புக்கள் | - | - | - | 9,225,543 | - | - | 9,225,543 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 1,163,537 | - | - | - | - | - | 1,163,537 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மிதிப்பீட்டில் உள்ள ஏனைய நிதியியல் சொத்துக்கள் | - | - | - | - | - | - | - |
| வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள் | - | - | - | 5,074,856 | - | - | 5,074,856 |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள் | - | - | - | 52,667,312 | - | - | 52,667,312 |
| நிதியியல் முதலீடுகள் | 3,418,139 | - | - | - | 29,801,689 | - | 33,219,828 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **4,581,676** | **-** | **-** | **74,403,456** | **29,801,689** | **-** | **108,786,821** |

| 31/12/2015 இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | வ.வை | இ.அ.ந. ஊ.நி.ம. நி | கடன் தீர்ப்பனவுச் செலவு | காப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **பொறுப்புக்கள்** | | | | | |
| வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை | - | - | 2,823,920 | - | 2,823,920 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 851,015 | - | - | - | 851,015 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மிதிப்பீட்டில் உள்ள ஏனைய நிதியியல் பொறுப்புக்கள் | - | - | - | - | - |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை | - | - | 78,968,451 | - | 78,968,451 |
| ஏனைய கடன்பாடுகள் | - | - | 362,520 | - | 362,520 |
| வழங்கப்பட்ட படுகடன் பிணைகள் | - | - | - | - | - |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | **851,015** | **-** | **82,154,891** | **-** | **83,005,906** |

வர்த்தகத்திற்காக வைக்கப்பட்டிருப்பவை - வ.வை

இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டுக்காக நியமிக்கப்பட்டவை - இ.அ.ந.ஊ.நி.ம.நி

கடன்கள் மற்றும் வருமதிகள்/கடன் தீர்ப்பனவிலுள்ள வைப்புக்கள்/கடன் தீர்ப்பனவுச் செலவு

முதிர்ச்சியடையும் வைக்கப்பட்டிருப்பவை - மு.வ.வை

விற்பனைக்குக் கிடைக்கக்கூடியவை - வி.கி.கூ

நியாய மதிப்பீட்டுச் சாதனங்கள் மற்றும் காசுப்பய்ச்சல் - காப்பு

## ஸ்டான்டர்ட் சார்டர்ட் வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி

அ.டொலர்.மில்

| வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் | நடப்பு காலப் பகுதி 31/12/2016இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | முன்னைய காலப்பகுதி 31/12/2015இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் | 262,250 | 268,083 |
| தனிப்பட்ட பெறுமதிக் குறைப்பு ஏற்பாடு | (5,667 ) | (6,023 ) |
| திரண்ட பெறுமதிக் குறைப்பு ஏற்பாடு | (687 ) | (657 ) |
| | **255,896** | **261,403** |
| இலாபம் அல்லது நட்ட ஊடாக நியாய மதிப்பீட்டில் உள்ளவை உள்ளடங்கலாக | (3,177 ) | (4,047 ) |
| **தேறிய கடன்கள் மற்றும் வருமதிகளும்** | **252,719** | **257,356** |

| ஏனைய வாடிக்கையாளர்களுக்கும் வங்கிகளுக்கும் கொடுக்கவேண்டியவை - பொருள் ரீதியாகநடப்பு காலப் பகுதி | நடப்பு காலப் பகுதி 31/12/2016இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | முன்னைய காலப்பகுதி 31/12/2015இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| வாடிக்கையாளர் கணக்குகள் | 371,855 | 350,633 |
| வாடிக்கையாளர் கணக்குகள். அடங்கலாக, இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் உள்ள நிதியியல் பொறுப்புக்கள் | 6,447 | 8,494 |
| **மொத்தம்** | **378,302** | **359,127** |

### அத்தாட்சிப்படுத்துகை:

மேலேயுள்ள தகவல்களானது 31 டிசம்பர் 2016 கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கையிலிருந்து இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு (SLFRS/LKAS) தொகுக்கப்பட்டவையாகும்.

மேலுள்ள அறிக்கைகள், இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் வரைவிலக்கணங்களுக்கு அமைவாகவே தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையானது KPMG இனால் கணக்காய்வு செய்யப்பட்டு, மாறுபடாத அபிப்பிராயத்துடன், விஷேச சொல்லழுத்தமாக, (அ) வங்கியினால் இலங்கை உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட பற்றுக்கள் வரி தொடர்பான ஆணை குறிப்பும், அரசால் கையகப்படுத்தப்பட்ட வங்கியின் ஒரு அறுதி சொத்தை பற்றியும், அவர்களது 28ம் மார்ச் 2017இல் கணக்காய்வு அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

..................................
ஜிம் மெக்கேப்
(கையொப்பமிடப்பட்டது) பிரதம நிறைவேற்று அதிகாரி
திகதி: 28/03/2017

..................................
நிஷானி ஆரியவன்ச
(கையொப்பமிடப்பட்டது) நிதியியல் கட்டுப்பாட்டாளர்
திகதி: 28/03/2017

Standard Chartered

# கூட்டாண்மை ஆளுகை அறிக்கை

முன்னணி சர்வதேச வங்கியியல் குழுமமாக ஸ்டான்டர்ட் சார்ட்டட் அமைந்துள்ளதுடன், உலகின் வினைத்திறன் வாய்ந்த சந்தைகளில் 150 வருட காலம் இயங்கிய வரலாற்றைக் கொண்டுள்ளது. முதலீடு, வியாபாரம் மற்றும் வளங்களை நாடும் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த மக்கள் மற்றும் நிறுவனங்களுடன் நாம் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகிறோம். லண்டனில் தலைமையகத்தைக் கொண்டுள்ளதுடன், லண்டன் மற்றும் ஹொங் கொங் பங்குப்பரிவர்த்தனைகளில் பட்டியலிடப்பட்டுள்ளது. சந்தை மூலதனவாக்கத்தின் பிரகாரம் FTSE 100 ல் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. வியாபார நிதியியல் மற்றும் வணிக வங்கியியல் போன்றன ஸ்டான்டர்ட் சார்ட்டட் வேரூன்றியுள்ளதுடன், அதன் வரலாற்றில் வெற்றிகரமான இயக்கத்துக்கு பங்களிப்பு வழங்கியுள்ளன. வங்கியின் வர்த்தக நாம உறுதி மொழி என்பது, Here for good என்பதாக அமைந்துள்ளதுடன்,அது மேற்கொள்ளும் ஒவ்வொரு தீர்மானத்திலும் உட்பதிந்துள்ளது. தான் இயங்கும்வாடிக்கையாளர்கள், பங்காளர்கள் மற்றும் நாடுகளில் இதை பின்பற்றி வருகிறது.

### கூட்டாண்மை ஆளுகைக்கான எமது ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறை

முகாமைத்துவம் மற்றும் பணிப்பாளர் சபை ஆகியவற்றுக்கிடையில் வெளிப்படைத்தன்மை மற்றும் திறந்த தன்மை ஆகியவற்றை பேணுவதனூடாக வினைத்திறன் வாய்ந்த ஆளுகையை பேண முடியும் என்பதில் ஸ்டான்டர்ட் சார்ட்டட் நம்பிக்கை கொண்டுள்ளது.

துணை நிறுவனங்கள் மற்றும் கிளைகளினூடாக செயற்படுத்தப்படும் குழும கட்டமைப்பை ஸ்டான்டர்ட் சார்ட்டட் கொண்டுள்ளது. மேலும்,ஒட்டுமொத்த ஆளுகை செயற்பாடுகளை தொடர்ச்சியாக பின்பற்றுவதுடன், உள்ளூர் சட்ட, ஒழுங்குபடுத்தல் மற்றும் ஆளுகை தேவைப்பாடுகளுக்கு மதிப்பளித்து இயங்கி வருகிறது. மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், ஆளுகை என்பது நிறுவனத்தின் நான்கு புவியியல் பிராந்தியங்களில் நிர்வகிக்கப்பட்டிருந்தது. குறித்த பிராந்தியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியின் அலுவலகத்தினூடாக, வியாபாரங்கள் மற்றும் செயற்பாடுகள் மூலமும் நிர்வகிக்கப்படுகிறது. வாடிக்கையாளர்களுக்கு மேலதிகமாக, வங்கியின் பங்காளர்களில், அரசாங்கங்கள், ஒழுங்குபடுத்துநர்கள், பங்காளர்கள், ஊழியர்கள், விநியோகஸ்த்தர்கள் மற்றும் இயங்கும் சமூகங்கள் போன்றன உள்ளடங்குகின்றன.

முன்னணி சர்வதேச வங்கி எனும் வகையில், ஸ்டான்டர்ட் சார்ட்டட் வங்கி கூட்டாண்மை ஆளுகை தொடர்பில் சிறந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முயற்சித்த வண்ணமுள்ளது. நிறுவனங்களுக்கு வினைத்திறன் வாய்ந்த கூட்டாண்மை மேலாண்மை கலாசாரத்தை கொண்டிருப்பதற்கு சிறந்த கலாசாரம் மற்றும் நடத்தைகளை கொண்டிருப்பது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதில் வங்கி நம்பிக்கை கொண்டுள்ளது. சகல ஊழியர்களும் ஆளுகை கட்டமைப்பை பின்பற்றுவது மற்றும் ஒழுக்க கடிதத்தில் அடங்கியுள்ள விடயங்களை பின்பற்றுவது போன்றன சகல ஊழியர்களின் பொறுப்பாக அமைந்துள்ளன.

ஸ்டான்டர்ட் சார்ட்டட்டில், ஒவ்வொரு ஊழியரும் குழுமத்தின் வர்த்தக நாம உறுதி மொழியான Here for good என்பதை பின்பற்ற வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது. திறந்த மற்றும் சவால்கள் நிறைந்த கலாசாரத்தில் அங்கம் வகிப்பது என்பதும் எதிர்பார்க்கப்படுகிறது. ஊழியர்கள் நடந்து கொள்ளும் விதத்தில் அதிகளவு கவனம் செலுத்தப்படுவதுடன், அவர்களுக்கு அவசியமான ஆளுமைகள், பெறுமதிகள் மற்றும் அனுபவங்கள் போன்றன பொறுப்புகளுடன் இணைந்ததாக காணப்படும்.

### ஸ்டான்டர்ட் சார்ட்டட் குழும பணிப்பாளர் சபை

ஸ்டான்டர்ட் சார்ட்டட்டில் பிஎல்சியில், சர்வதேச மற்றும் பிராந்திய வாடிக்கையாளர் பிரிவுகள் காணப்படுகின்றன. இவை அனைத்துக்கும் வியாபார செயற்பாடுகளால் உந்துதல் அளிக்கப்படுகின்றன. குழுமத்தின் பணிப்பாளர் சபைக்கு தலைமை பதவியை ஜோஸ் வினல்ஸ் வகிக்கிறார். அதன் முகாமைத்துவ அணியில், குழும பிரதம நிறைவேற்று அதிகாரி பில் வின்டர்ஸ் செயற்படுவதுடன், குழுமத்தின் பிரதம நிதி ஆலோசகராக அன்டி ஹல்ஃபோர்ட் காணப்படுகிறார். 2016 டிசம்பர் 1ம் திகதி முதல் பதில் தலைவராக நகிப் கொராஜ் இயங்கி வருகிறார்.

பணிப்பாளர் சபையில் அடங்கியிருக்கும் அங்கத்தவர்கள் பரந்தளவு ஆளுமைகள், அனுபவம், பின்புலம் மற்றும் சரியான கண்ணோட்டத்தையும் கொண்டுள்ளனர். 2016 டிசம்பர் மாத இறுதியில், பணிப்பாளர் சபையின் ஒன்பது பணிப்பாளர்கள் ஆசியா, ஆபிரிக்கா அல்லது மத்திய கிழக்கு பிராந்தியங்களில் வசித்திருந்தனர் அல்லது/மற்றும் பணியாற்றியிருந்தனர். வங்கியின் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் அனைவரும் வங்கியியல், நிதியியல், இடர் மற்றும் கணக்கியல் அனுபவத்தை கொண்டுள்ளனர்.

எமது நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களின் பணிக்காலத்தை அவர்களுக்கு பொருத்தமான பணிகளை உறுதி செய்வது பற்றி நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

### பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம்

ஸ்டான்டர்ட் சார்ட்டட் நிலையான பிரசன்னத்தைக் கொண்டுள்ளதுடன், நீண்ட கால வரலாற்றையும், பரந்தளவு பணிப்பாளர் சபை அங்கத்துவத்தையும் கொண்டுள்ளது. ஆளுமைகள், அறிவு, அனுபவம் மற்றும் கலாசார வேறுபாடுகள் போன்றன பணிப்பாளர் சபை கலந்துரையாடல்களில் வலுச்சேர்ப்பதோடு, அதிகளவு வினைத்திறன் வாய்ந்த பணிப்பாளர் சபைக்கு பங்களிப்பு வழங்குகிறது. 2017ல் 25 சதவீதமான பெண் ஊழியர்களை கொண்டிருப்பது எனும் அதன் நோக்கத்துக்கமைய,பாலின சமத்துவத்திலும் சிறந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆண்டில் இதற்கான அர்ப்பணிப்பு மேலும் உறுதி செய்யப்பட்டிருந்ததுடன், பணிப்பாளர் சபை பன்முகப்படுத்தல் கொள்கையும் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபை எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்துவதுடன், இந்த பிரிவின் இலக்குகளுக்கமைய செயலாற்றி வருகிறது. பணிப்பாளர் சபையில் பெண்களின் ஈடுபாட்டை 33 சதவீதமாக உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### கொள்கை பிரச்சினைகள் மீதான கவனம்

எதிர்வரும் காலத்தில் எதிர்கொள்ளக்கூடிய சவால்கள் பற்றி வங்கி அறிந்துள்ளதுடன், குழுமம் மற்றும் சர்வதேச வங்கியியல் துறையில் எழக்கூடிய சவால்கள் பற்றி அறிந்துள்ளது. ஒழுங்குபடுத்தலில் எழக்கூடிய உறுதியற்ற தன்மை என்பது கொள்கை வரைவாளர்களுக்கு குறித்த சூழல்களுக்கு பொருத்தமான திட்டங்களை வரைந்து, அவற்றினூடாக பெறுமதி சேர்த்து பங்குதாரர்களுக்கு நிலைபேறான வருமானத்தை ஏற்படுத்திக்கொடுப்பது பற்றி கவனம் செலுத்துகிறது. இதேவேளை, வங்கி இயங்கும் சந்தைகளில் காணப்படும் பொருளாதார நிலை என்பது தொடர்ந்தும் உறுதியற்றதாக அமைந்திருக்கும். 2015ல் நிர்ணயிக்கப்பட்ட வியாபாரத் திட்டம் என்பது, தற்போது காணப்படும் சூழல்களுக்கு பொருத்தமானதாக அமைந்துள்ளது. சிறந்த வாடிக்கையாளர் அனுபவங்களை பெற்றுக்கொடுப்பதற்கு புதிய தொழில்நுட்பங்களில் முதலீடுகளை மேற்கொள்வது என்பது மற்றும் முன்நோக்கிய செயற்பாடுகளுக்கு வலிமையான கட்டுப்படுத்தல்கள் போன்றன இன்றியமையாததாக அமைந்துள்ளன.

தற்போது ஸ்டான்டர்ட் சார்ட்டட் குழுமத்திடம் உறுதியான மூலதன இருப்பு காணப்படுகிறது. திட்டத்துக்கமைய செயலாற்ற வங்கி கவனம் செலுத்துவதுடன், சூழல்நிலைகளை பின்பற்ற செயலாற்றுவது பற்றியும் கவனம் செலுத்தும். உறுதியான அடித்தளங்களை கொண்டுள்ள இந்த வங்கியின் மூலமாக, வருமானத்தில் வளர்ச்சியை ஏற்படுத்துவது என்பது உள்ளடங்கியுள்ளது. பங்காளர்களுக்கு உறுதியான செலவீன மற்றும் இடர் முகாமைத்துவ வருமதிகளை பெற்றுக்கொடுப்பது பங்காளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பது பற்றி கவனம் செலுத்துகிறது.

கூட்டாண்மை மற்றும் நிறுவனசார் வங்கியியல் செயற்பாடுகளில் மேம்படுத்தல்களை வங்கி மேற்கொண்டுள்ளது. தனது சில்லறை வங்கியியல் வியாபாரத்தை மாற்றியமைத்த வண்ணமும் உள்ளது. இந்த செயற்பாடுகளினூடாக ஸ்டான்டர்ட் சார்ட்டடை அதிகளவு வினைத்திறன் வாய்ந்த மற்றும் கையாள்வதற்கு இலகுவான வங்கியாக மாற்றியமைத்துள்ளது. வங்கியின் நிலையை நீண்ட கால நிலைபேறான வளர்ச்சிக்கும் சிறந்த வருமதிகளை பெற்றுக்கொடுப்பதற்கும் உகந்த வகையில் தனது நிலையை மாற்றியமைத்துள்ளது. புதிதாக மாற்றியமைக்கப்பட்டுள்ள குழுமக் கட்டமைப்பு என்பது,தற்போது வலிமையாக உள்வாங்கப்பட்டுள்ளதுடன்,உள்நாட்டு முகாமைத்துவம் தற்போது குழுமத்தின் தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளில் செல்வாக்கு செலுத்தும் தன்மை கொண்டுள்ளன. இதன் மூலமாக வங்கியின் உறுதியான மத்திய இயலுமைகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

### நிதி அறிக்கையிடல்

நிதி அறிக்கையிடல் தொடர்பான கழகத்தின் பிரதான செயற்பாடு என்பது குழுமத்தினால் வெளியிடப்படும் நிதி அறிக்கைகள் மற்றும் குழுமத்தின் நிதிப் பெறுபேறுகள் பற்றிய உத்தியோகபூர்வ அறிவித்தல்கள், நிதி அறிக்கையிடல் மத்தியஸ்த்தங்களை மீளாய்வு செய்தல் மற்றும் அவற்றில் காணப்படும் கணக்கீடு சம்பந்தமான பிரச்சினைகள் போன்றவற்றை மேற்பார்வை செய்வதாக அமைந்துள்ளது.

குழுமத்தின் நிதிப்பிரிவு என்பது மேலோட்டமாக இயங்குவதுடன், குழுமத்தின் வெவ்வேறு நிறுவனங்கள் இயங்கும் நாடுகளிலிருந்து நிதி தொடர்பான தகவல்களை திரட்டுவதற்கு பொறுப்பாக அமைந்துள்ளது. அத்துடன், கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை பிரயோகித்தல், பிரதான மதிப்பீடுகளை உள்ளடக்கல் மற்றும் மத்தியஸ்தம் வகித்தல், போதியளவு கணக்கீடுகளை நிதியியல் பதிவுகளையும் வழங்கல் மற்றும் குழுமம் தொடர்பான உத்தியோக அறிவித்தல்களை வெளியிடல் போன்றவற்றையும் முன்னெடுக்கிறது.

குழுமத்தின் நிதி அணி மற்றும் நாடுகளுக்கான அறிக்கை வழங்கும் அணிகள் ஆய்வு செயன்முறைகளை முன்னெடுப்பதுடன், கணக்கியல் நியமங்கள், சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் விடயங்களுக்கமைய ஒழுக்கத்தை உறுதி செய்கின்றன. தினசரி அடிப்படையில் ஈடுபாடுகளை பேணி, மதிப்பீடு செய்து, நிர்வகித்து சம்பந்தப்பட்ட விடயங்களை தீர்த்து வைக்கும் நடவடிக்கைகளையும் கொண்டுள்ளது. நாடுகளுக்கான அறிக்கையிடலை வழங்கும் அணியினரால் சமர்ப்பிக்கப்படும் சகல நிதி தகவல்களும் குறித்த நாட்டில் அமைந்துள்ள நிதிக்கட்டுப்பாட்டாளரால் சான்றளிக்கப்பட்டிருக்கும்.

குழுமத்தின் கணக்கியல் கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் போன்றன பொருத்தமானவையாக அமைந்துள்ளமை தொடர்பில் குழுமம் தன்னிறைவடைந்துள்ளது.

2016ல், குழுவினால் முதல் மற்றும் மூன்றாம் காலாண்டுகளுக்கான இடைக்கால முகாமைத்துவ அறிக்கைகள் கவனத்தில் கொண்டிருந்தது. 2016ல் கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள், நிதி ஆவணங்களின் மதிப்பாய்வுகள் மற்றும் நன்நடத்தை மீறல் பரிசோதனை போன்ற விடயங்களில் குழு கவனம் செலுத்தியிருந்தது.

### இடர் முகாமைத்துவம்

வினைத்திறன் வாய்ந்த இடர் முகாமைத்துவம் என்பது வங்கியின் நிலைபேறான வினைத்திறனுக்கு அத்தியாவசிய தேவையாக அமைந்துள்ளதுடன், வங்கியின் அனைத்து பங்காளர்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. எனவே, இது குழுமத்தின் நிதி மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவத்தின் மத்திய அங்கமாக அமைந்துள்ளது. குழுமத்தினால் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி சேர்க்கப்படுவதுடன், அது இயங்கும் சமூகங்களில் பெறுமதியை சேர்த்து,இடர்களை நிர்வகித்தும், முன்னெடுத்தும் பங்காளர்களுக்கு வருமதிகளை ஏற்படுத்திக்கொடுக்கிறது. வங்கியின் இடர் முகாமைத்துவ கட்டமைப்பில், வங்கியினால் வியாபார பரந்த இடர்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

2016ம் ஆண்டு என்பது இடர் மற்றும் ஒழுக்க விதிமுறைகளில் பல பதிவுகளை வங்கி மேற்கொண்டிருந்தது. வருட நிறைவில் வங்கியின் ஐந்தொகை என்பது, அதிகளவு செறிமானத்தைக் கொண்டிருக்கவில்லை. பரந்தளவு வலையமைப்பையும் கொண்டிருந்ததுடன், இடர் மேலாண்மை கட்டமைப்பு குழுமத்தின் கொள்கையில் பெருமளவு பங்களிப்பை பெற்றுக்கொடுக்கும் வகையில் அமைந்திருந்தது. இடர்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன், அளவிடப்பட்டு அவை சுமூகமாக நிர்வகிக்கப்பட்டிருந்தன. இதனூடாக வங்கியின் நிலைபேறான செயற்திறன் முன்னெடுக்கப்படுவது உறுதி செய்யப்பட்டிருந்தது.

குழுமத்தின் கொள்கை சார் தீர்மானமெடுத்தலில் இடர் மற்றும் ஒழுக்கநெறி செயற்பாடுகள் முக்கிய பங்கை வகிக்கின்றன. வலிமையான மற்றும் வினைத்திறன் வாய்ந்த வியாபாரங்களை கட்டியெழுப்புவதிலும் பிரதான பங்கை வகிக்கிறது. குழுமத்தின் இடர் முகாமைத்தவத்துடன் கூடிய வியாபாரத்திட்டங்கள் பற்றி பணிப்பாளர் சபையின் மேற்பார்வை காணப்பட்டது. வங்கி உறுதியான மூலதனத்தை கொண்டிருந்ததுடன், திரள்வு நிலையையும் பேணியிருந்தது. அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட அணியின் மூலமாக வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன.

சிறந்த இடர் முகாமைத்துவம் என்பது, வெறுமனே வெளிப்படுத்தல்களை குறைப்பது என்பதாக அமைந்துவிடாது. குறித்த பிரிவுகள் மற்றும் இடங்களில் ஸ்டான்டர்ட் சார்ட்டட் தனது பிரசன்னங்களை மேம்படுத்தியுள்ளது. இடர் மற்றும் ஒழுக்க செயற்பாடுகள் என்பதன் மீது கவனம் செலுத்தப்பட்டு இயங்கும் நிலைகளை கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. குழுமத்தினுள் ஆரோக்கியமான இடர் முகாமைத்துவ கலாசாரம் பேணப்படுவதுடன், குழுமத்திலுள்ள ஒவ்வொருவரும் வியாபார இலக்குகளை எய்துவதிலும், நிலைபேறான வளர்ச்சியை எய்துவதிலும் அதிகளவு கவனம் செலுத்துகின்றனர்.

### வர்த்தக நாமம் மற்றும் பெறுமதிகள்

2015ன் நிறைவில், குழுமத்தின் Here for good எனும் வர்த்தக நாம உறுதிமொழி மீது மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. ஊழியர்கள் மத்தியில் இந்த வாசகம் பொருத்தமானதாக அமைந்திருந்ததை அவதானிக்க முடிந்ததுடன், குழுமத்தின் வாடிக்கையாளர்களுடன் இணைந்த செயற்பாடுகளுக்கு பதிலாக சமூக ஈடுபாடுகளுடன் பெருமளவு இணைந்ததாக அமைந்திருந்தது. வங்கியினால் வர்த்தக நாமம் மற்றும் கலாசார மீளாய்வுகளை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சரியான முறையில் செயற்பாடுகளை முன்னெடுப்பது என்பதற்கு அமைவாக, வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு நேர்த்தியான பரந்த பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் பங்களிப்பை வழங்கி வருகிறது. ஸ்டான்டர்ட் சார்ட்டட்டின் சிறப்பு கலாசாரம் மற்றும் பெறுமதி என்பது தார்மீக திசைகாட்டியாக அமைந்துள்ளதுடன், வாடிக்கையாளர்கள் தொடர்ந்தும் வங்கியுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கான காரணமாகவும் அமைந்துள்ளது. அதுபோலவே, ஊழியர்களும் வங்கியுடன் இணைந்து தொடர்ந்து தொழில்புரிய ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றனர். வங்கியன் ஐந்து பிரதான பெறுமதிகளான வெளிப்படைத்தன்மை, ஒன்றிணைவு மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்குவது,தைரியம், பரிவு, சர்வதேசம், ஆக்கத்திறன் மற்றும் நம்பிக்கைத்தன்மை போன்றவற்றை முன்னெடுப்பதற்கான அர்ப்பணிப்பின் மூலம் அதன் சிந்தனை, தீர்மானம் மற்றும் அனைத்து நடவடிக்கைகளிலும் ஆதரவாக அமைந்துள்ளன. ஸ்டான்டர்ட் சார்ட்டட் வர்த்தக நாமத்தின் உறுதி மொழியாக நன்மைக்காக இங்குள்ளோம் என்பதற்கு அமைவாக, வாடிக்கையாளர்களுடன் சந்தோஷமான மற்றும் துக்கமான சகல தருணங்களிலும் இணைந்திருந்து சரியான செயற்பாடுகளை எப்போதும் முன்னெடுக்கிறது.

### நிலைபேறாண்மை

தனது வாடிக்கையாளர்கள் மற்றும் பங்காளர்களுடன் இணைந்து சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியை பிரதான பொருளாதார துறைகளில் ஏற்படுத்துவதற்காக வங்கி செயலாற்றி வருகிறது. அதனூடாக நிலைபேறான வளர்ச்சி எய்தப்படுவதுடன்,வழங்கல் மற்றும் செயற்பாடுகள் போன்றவற்றால் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றியும் கவனம் செலுத்தி சமூகங்களில் முதலீடுகளை மேற்கொண்ட வண்ணமுள்ளது. 2016ல்,வங்கியினால் நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்கப்படுவதற்கு நிதிகளை பெற்றுக்கொடுக்கும் 11 நிலைபேறான எதிர்பார்ப்புகளுக்கு உடன்படிக்கை எய்தப்பட்டிருந்தது. செயற்பாடுகளின் மூலமாக சூழலுக்கு பாதிப்பு ஏற்படுவதை குறைத்தல் மற்றும் உள்நாட்டு சமூக செயற்பாடுகளுக்கு உதவிகளை வழங்கல்,காண்பது என்பது நம்புவது எனும் நடவடிக்கை அடங்கலாக, தவிர்த்துக்கொள்ளக்கூடிய குருட்டுத்தன்மையை நீக்குவது,பெண்கள் மற்றும் இளம் பெண்களுக்கு விளையாட்டு மற்றும் வாழ்க்கைத்திறன் பயிற்சிகளினூடாக வலுவூட்டல்,நிதிசார் கல்வியறிவினூடாக ஆளுமை படைத்த இளம் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவது போன்றன அடங்கியிருந்தன.

2008 முதல் 2016 வரை வங்கியினால் அதன் வலு நுகர்வு 37 சதவீதத்தால் குறைந்திருந்தது. நீர் நுகர்வு 35 சதவீதத்தால் குறைந்திருந்தது. கடதாசி நுகர்வு 71 சதவீதத்தால் குறைந்திருந்தது. 2016ல், ஸ்டான்டர்ட் சார்ட்டட் இனால் 52.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சமூக நிகழ்ச்சிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இதற்கு ஊழியர்கள் 67611 தன்னார்வ தினங்களை பங்களிப்பு செய்திருந்தனர். நிதி திரட்டல் மற்றும் குழுமத்திடமிருந்தான உதவிகளின் மூலமாக 6.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் “Seeing is Believing” (SIB)எனும் திட்டத்துக்காக திரட்டப்பட்டிருந்தது. 2003 – 2016 வரை நிதி திரட்டல் என்பது 92.8 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அமைந்திருந்ததுடன், இதனூடாக 133.8 மில்லியன் மக்களின் வாழ்வில் பங்களிப்பு செய்யப்பட்டிருந்தது. 2016ல் வங்கி Goal என்பதன் 10வருட நிறைவை கொண்டாடியிருந்ததுடன், 69000 பெண்களை சென்றடைந்து, 2006 முதல் 2016 வரையான மொத்த எண்ணிக்கையை 285,000 ஆக பதிவு செய்துள்ளது. நிதிசார் அறிவூட்டல் நிகழ்ச்சிகளினூடாக, எமது ஊழியர்களால் 106000க்கும் அதிகமான இளைஞர்களுக்கும், 1020க்கும் அதிகமான தொழில் முயற்சியாளர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. இதில் 57 சதவீதமானவர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

காலநிலை மாற்றத்தை உள்ளடக்கி நிலையை வெளிப்படுத்தும் அறிக்கை 2016 மார்ச் மாதம் வெளியிடப்பட்டிருந்தது. உயர் தர ஆளுமை அடிப்படையிலான ஊழியர் தன்னார்வ நேரம் என்பதில் குழுமம் தங்கியிருந்தது.

### வாடிக்கையாளர் மீதான கவனிப்பு

2016ல், ஸ்டான்டர்ட் சார்ட்டட் வங்கியின் மூலமாக வாடிக்கையாளர்களை வியாபாரத்தின் கருப்பொருளாக திகழச் செய்வதற்கு வெவ்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. தனது நான்கு வாடிக்கையாளர் பிரிவுகளிலும் கிடைக்கும் அனுபவங்களை மேம்படுத்துவதற்காக அதிகளவு முதலீடுகளையும் மேற்கொண்டிருந்தது. உதாரணமாக, கூட்டாண்மை மற்றும் நிறுவனசார் வங்கியியலை பொறுத்தமட்டில்,வாடிக்கையாளர்களின் விநியோக தொடர் செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தது. மேலும் தனது டிஜிட்டல் செயற்பாடுகளையும் மேம்படுத்தியிருந்தது. சில்லறை வியாபாரத்தை பொறுத்தமட்டில்,வீடியோ வங்கியியல் தீர்வு முறையும் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இதில் குரல் biometric தொழில்நுட்பமும் உள்ளடங்கியுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு புத்தாக்கமான கொடுப்பனவு முறைகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன்,வணிக வங்கியியலை பொறுத்தமட்டில், வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுக்கும் காலப்பகுதியை குறைக்கும் நடவடிக்கைகளை வங்கி மேம்படுத்தியிருந்தது. வங்கியின் வாடிக்கையாளர் வலையமைப்புகளை மேம்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தியிருந்தது. தனியார் வங்கியியலை பொறுத்தமட்டில், ஆதன முகாமைத்துவ பிரிவு மேம்படுத்தப்பட்டிருந்தது. கணக்கு ஆரம்பிக்கும் செயன்முறையும் எளிமைப்படுத்தப்பட்டிருந்தது. வங்கியை எளிமையான, வேகமான மற்றும் சிறந்த நிறுவனமாக திகழச் செய்வதற்கு அதிகளவு முதலீடுகளை மேற்கொண்ட வண்ணமுள்ளது.

2016ல் வங்கி எய்தியிருந்த செலவீன வினைத்திறன்கள் போன்றன,குழுமத்தின் போட்டிகரத்தன்மை வாய்ந்த அனுகூலங்களை மாற்றியமைக்கும் திறனை வழங்கியிருந்தன. இந்த முதலீடுகளின் மூலமாக வங்கியினால் வழங்கப்படும் சேவையின் தரம் மேம்படுத்தப்படும் என்பதுடன்,வாடிக்கையாளர்களுக்கு அதிகளவு வருமானத்தை திரட்டிக்கொள்ளவும், போட்டியாளர்களிடமிருந்து பாதுகாப்பான வளர்ச்சி வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்கவும் உதவியாக அமைந்திருக்கும்.

புத்தாக்கம் என்பதற்காக ஸ்டான்டர்ட் சார்ட்டட் வங்கி என்பது அதிகளவு கௌரவிப்பை பெற்றுள்ளதுடன், அதன் புத்தாக்கம் மற்றும் உயர் வருமதிகள் போன்றவற்றில் வரும் ஆண்டுகளில் தங்கியிருக்கக்கூடியதாக இருக்கும்.

### அரசாங்கம் மற்றும் ஒழுங்குபடுத்தல் உறவுகள்

சர்வதேச வங்கி எனும் வகையில் ஸ்டான்டர்ட் சார்ட்டட் வங்கி, வளர்ந்து வரும் சிக்கலான ஒழுங்கமைப்பு கட்டமைப்பு சட்டங்கள், ஒழுங்குகள் மற்றும் செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு அமைவாக ஒவ்வொரு நாடுகளிலும் தனது செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்கும். சில அரசாங்கங்கள் மற்றும் ஒழுங்குபடுத்துனர்கள் சட்டம், ஒழுங்குகளை மற்றும் பொருளாதார கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி வருவது உறுதியற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது.

உத்தேசிக்கப்பட்டுள்ள மாற்றங்கள் கூட பொருளாதார வளர்ச்சியை கணிசமான அளவு பாதிக்கக்கூடும். நிதிச் சந்தைகளின் திரள்வுத்தன்மை மற்றும் வர்த்தகங்கள் முன்னெடுக்கப்படும் விதம் போன்ற செயற்பாடுகளை பாதிக்கும் வகையில் அமைந்திருக்கும். இந்த சவால்களுக்கு மத்தியில், வங்கி தொடர்ந்தும் அதிகளவு திரள்வு தன்மையுடன் காணப்படுவதுடன், தற்போது வெளியாகியுள்ள எதிர்கால அறிக்கைகளுக்கு அமைவாக, உறுதியான எதிர்வுகூறல்களையும் வெளிப்படுத்தியுள்ளது. ஒழுங்குபடுத்தல்கள் தொடர்பான விவாதங்களில் வங்கி தொடர்ந்து பங்கேற்கும் என்பதுடன், அவற்றின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் ஆக்கபூர்வமான விடயங்களை கவனத்தில் கொண்டு, அவற்றை செயற்படுத்துவதற்கான கரிசனையையும் செலுத்தும்.

அரசாங்கங்கள், ஒழுங்குபடுத்துநர்கள் மற்றும் கொள்கை வடிவமைப்பாளர்கள் ஆகியோருடன் சர்வதேச மற்றும் பிராந்திய மட்டத்தில் வங்கி ஈடுபாட்டைக் கொண்டுள்ளதுடன், அதனூடாக பிரதான கொள்கைப் பிரச்சினைகள் தொடர்பில் தொழில்நுட்ப நிபுணத்துவத்தையும் உள்ளார்ந்த அம்சங்களையும் பகிர்ந்த வண்ணமுள்ளது. இந்த ஈடுபாடு என்பது வெவ்வேறு சந்தைகளில் தொடர்ச்சியான வழிமுறைகளை பின்பற்ற உதவுவதுடன், சிறந்த செயன்முறைகளை கொண்டுள்ளது. வங்கி சகல வெளிப்படையான தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளதுடன், அரசியல் செயற்பாடுகள் தொடர்பான விவரங்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

அரசாங்கங்கள் மற்றும் இதர ஒழுங்குபடுத்துநர்களுடன் ஸ்டான்டர்ட் சார்ட்டடின் ஈடுபாடு என்பது தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதுடன், தொழிற்துறைசார்ந்த பணியாற்றல் குழுக்களுடன் இணைந்ததாக அமைந்துள்ளன. 2016ல், உதாரணமாக ஒழுங்குபடுத்தல் கட்டமைப்புகளில் பிரேரிக்கப்பட்ட மாற்றங்களுக்காக வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த எழுத்து மூல மற்றும் வாய் மூல பதில்களை வங்கியின் சர்வதேச கொள்கை வடிவமைப்பாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள், குழுமத்தின் மேலாண்மை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின் சாராம்சமாக அமைந்துள்ளது. முழுமையான அறிக்கையானது, குழுமத்தின் வருடாந்த ஆண்டறிக்கையை www.sc.comஎனும் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**மேற்குறிப்பிடப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் குழுமத்தின் வருடாந்த அறிக்கையில் இருந்து பெறப்பட்டவையாகும். முழுமையான அறிக்கையை www.sc.com என்ற இணையத்தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.**